என்று பெருமூச்சு விட்ட அவள் வெளியே தோட்டத்தைப் பார்ப்பதுபோல் ஜன்னல் அருகே திரும்பி நின்று கொண்டாள்.

அவளது வார்த்தைகளில் தொனித்த ஏக்கம் ரகுராமனைப் பிரமிக்கச் செய்தது. தங்கத்தை அத்தனை நாள் புரிந்துகொள்ளாதிருந்த தனது அறியாமைக்கு இரங்கிய அவன், எழுந்து சட்டெனச் சென்றான். சட்டைப் பையிலிருந்த கதம்ப சரத்தை எடுத்துக்கொண்டு அவள் அருகில் வந்தான். திரும்பியபடி நின்றுகொண்டிருந்த அவளது கூந்தலில் அதைத் தனது கரத்தால் சூடிய ரகுராமனுக்குப் பழைய நாட்களின் இன்ப நினைவுகள் உண்டாயின.

''தங்கம்! நான் எத்தனை முட்டாள் தெரியுமா! தொழிலில் ஊக்கம் அதிகரிக்க அதிகரிக்க நீ ஒருத்தி இருப்பதையே மறந்துவிட்டேன். மிகவும் பிசகுதான்'' என்றான் உணர்ச்சியுடன்.

லேசானதொரு புன்னகை தங்கத்தின் முகத்தில் அரும்பியது. கண்ணில் கசிந்த நீரைச் சட்டென்று துடைத்துக்கொண்ட அவள், ''எந்தப் பெண்ணுக்குத்தான் கணவனுடைய அன்புமொழியைக் கேட்கக் கசக்கும்? ஆனால், சரளா தன் ஏக்கத்தை இப்படிப் பிரபலப்படுத்திக்கொள்ள வேண்டாம்'' என்றாள்.

''நல்ல விசித்திரப் பெண்கள்!'' என்று ரகுராமன் உள்ளம் பெருமூச்செறிந்தது.

# முதல் வகுப்பு டிக்கெட்

சதாசிவத்திற்கு ஞாபக அதிகம் என்பதை ஜயா அறிவாள். இருந்தபோதிலும் அன்று அவன் ஞாபகம் அப்படி ஒரேயடியாக மங்கி மடிந்து போகும் என அவள் எதிர்பார்க்கவே இல்லை. அன்று செய்த தீர்மானம் அவனுடையதுதான். அதை நிறைவேற்ற மறந்து ஒதுங்கி விட்டாலும் பிசகு அவனுடையதுதான்.

அன்று காலை வந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான் சதாசிவம். ஏதோ எடுப்பதற்காக பீரோவைத் திறக்க மாடியறைக்கு வந்தாள் ஜயா. ''இதோ பார் ஜயா! உனக்குச் சந்தோஷ சமாசாரம்!'' என்று ஆரம்பித்தான் அவன். விஷயம் என்ன என்று அவள் கேட்கு முன் தொடர்ந்தாற்போல், ''உன்னுடைய அபிமான நக்ஷத்திரங்கள் 'கோவிந்தராம் - லீலாவதி' கோஷ்டியார் நகரத்தில் ஒரு வாரம் தங்கி நவீன விருந்து அளிக்கப் போகிறார்களாம். இன்று மாலை ஆறு மணிக்கு முதல் காட்சி 'விஜயா ஹாலி'ல் ஆரம்பமாகிறது'' என்று கூறிப் புன்னகை செய்தான்.

ஜயா பதில் பேசாது மௌனமாக பீரோவைத் திறந்து தட்டுகளில் தான் கோரி வந்த சாமானைத் தேடிக்கொண் டிருந்தாள். ''நீ இப்பொழுது என்ன யோசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்'' என்று கேலியாகக் கூறிவிட்டு, ''இந்தத் தடவையாவது 'கோவிந்தராம் - லீலாவதி' நடனத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டும். ஆரம்ப தினத் தன்றே போய்விட்டு வந்தால் நல்லது. ஏனென்றால், ஒரு சமயம் நாளைக்குப் போக முடியாது போய்விட்டால் அதற் கடுத்த நாள் டில்லியிலிருந்து அம்மாவும் அப்பாவும் வரப் போகிறார்கள். பிறகு நடனம் பார்க்கப் போவது என்பதே முடியாத காரியம் என்ற கவலைதான் உன் மனசில் தற்பொழுது வியாபித்துக் கொண்டிருக்கும் விஷயம். சரி தானே?'' என்று பரிகாசமாகக் கேட்டான்.

''இல்லை, வண்ணான் கணக்குப் புஸ்தகம் எங்கேயோ கெட்டுப்போய் விட்டதே என்ற கவலைதான் எனக்குத் தற்பொழுது'' என்று முத்துக்களை நிகர்த்த தன் வரிசைப் பற்கள் தோன்ற மெல்லச் சிரித்தாள் அவள்.

ஆனால், உண்மையில் அவள் மனசில் அதே யோசனை தான் அப்பொழுது ஏற்பட்டது. இரண்டாவது பிள்ளைக்கு உடம்பு சௌக்கியமில்லை என்று அவசரமாகப் புறப்பட்டு



டில்லிக்குச் சென்றிருந்தனர் அவளுடைய மாமனாரும் மாமியாரும். ஒரு மாத காலமாகி விட்டது. பிள்ளைக்கு உடம்பு தேவலை என்றும் தாங்கள் உடனே புறப்பட்டு இரண்டு தினங்களில் ஊருக்குத் திரும்பி வந்துவிடுவதாகவும் சமீபத்தில் வந்த கடிதத்தில் எழுதியிருந்தார் மாமனார்.

ஜயாவின் மாமியார் அலமேலு, நாட்டுப் பெண்களை மிகவும் கடுமையாக நடத்தும் வகையைச் சேர்ந்தவள் இல்லையென்றாலும், சில விஷயங்களில் அதிகமாகக் கண்டிப்பாக இருப்பவள்தான். குடும்ப வாழ்க்கையில் ஈடு பட வேண்டிய பெண்களுக்கு அதிகப் படிப்பும் கலை ஞானமும் அவசியம் இல்லை என்பது அவளது அபிப் பிராயம். அதுவும் நாட்டியக் கலை என்பது பெண்களுக்குத் தேவையே இல்லை என்பது அவளது கட்சி.

ஜயாவின் மாமனார் சங்கீதம், நாட்டியம் இவைகள் வீசை என்ன விலை என்று கேட்கும் ஆசாமி. அவளுடைய கணவன் சதாசிவமோ கலை விஷயத்தில் தந்தையையே பின்பற்றினான். ஆனால், ஜயாவின் தந்தையோ பெரிய கலா ரஸிகர். அதனாலேயே தமது அருமைக் குமாரி ஜயாவிற்குக் கலாசாலைப் படிப்புடன், சங்கீத சிக்ஷையும், பரத நாட்டியப் பயிற்சியும் அளித்து அவளைச் சகலகலா வல்லியாக ஆக்கிவிட்டார்.

நாட்டுப் பெண்ணுக்குப் பரதநாட்டியமும் ஆடத் தெரியும் என்ற விஷயம் முதலில் அலமேலு அம்மாளுக்குத் தெரியாது. பார்க்க லக்ஷணமாகவும் அடக்கமாகவும் இருக்கி றாள் பெண். ஏகப்பட்ட சொத்திற்கு ஒரே பெண். ஆகவே அதிகம் யோசனை செய்து கொண்டிராமல் கல்யாணத்தை நிச்சயம் பண்ணிவிட்டாள். கல்யாணத்திற்கு மறுநாள் சம்பந்தி அவர்கள் பெருமையுடன், ''இன்றைக் கச்சேரிக்கு நம்ம குழந்தையையே ஆடச் சொல்லலாமான்னு ஒரு

யோசனை தோணித்து. உங்க யோசனை என்ன?'' என்று கேட்டபொழுது அலமேலு அம்மாளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஜயா புக்ககத்திற்கு வந்த அன்றே மாமியார் அவளைக் கூப்பிட்டு, ''இதோ பார், அம்மா. இந்த ஆட்ட பாட்ட மெல்லாம் உன் பிறந்தகத்துடனேயே நிற்கட்டும். 'டான்ஸ்' என்றாலே சதாசிவத்திற்குப் பிடிக்காது'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

பிறந்தகத்திலிருந்து அருமையாக எடுத்து வந்த வீணை தூசி படிந்த உறையுடன், சாமான்கள் அறையில் தூங்கிக் கொண்டிருப்பதைக் காணும் பொழுதெல்லாம் ஜயாவிற்கு மிக வருத்தமாக இருக்கும். விரல்கள் புண்ணாகும்படி வாசித்து வாசித்துப் பயிற்சி செய்துகொண்ட வித்தை வீண்போவதை எண்ணிப் பல தடவை கண்ணீர் உகுத்திருக்கிறாள்.

சங்கீதமே அந்தப் பாடு படும் அந்த வீட்டில் அவள் தனது இன்னொரு கலையான நாட்டியத்தைப் பற்றி வாய் திறந்துகூடப் பேசியதில்லை. இரண்டே இரண்டு தடவை தான் அவள் தனது விருப்பத்தை மெல்ல வெளியிட்டாள். பிரபல நாட்டிய கோஷ்டியினரான 'கோவிந்தராம்-லீலாவதி'யின் நாட்டியத்தைக் காணவேண்டும் என்று கணவனிடம் சொன்னாள். இரண்டு தடவைகளும் அலமேலு அம்மாளின் அதிருப்திக்கு ஆளாகப் பயந்து கொண்டு சதாசிவம் அவளை நடனக்காட்சிக்கு அழைத்துச் செல்ல மறுத்து விட்டான். தனது அந்தச் சிறு ஆசையைப் பூர்த்தி செய்யக் கணவன் தயங்குவதைப் பற்றி ஜயாவிற்கு உள்ளூற வருத்தம் என்றாலும், அதை அதிகமாக அவள் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. சதாசிவத்திற்கும் தன் மனைவியின் உள்ளத்தைப்பற்றி நன்கு தெரியும். ஆனால், அவன் குடும்பத்தில் அமைதியை அதிகம் விரும்பும் மனிதன்.



தாய் தந்தையருக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்து அமைதியைக் குலைக்க இஷ்டப்படவில்லை. மேலும், ஜயா சில பெண்களைப்போல் மிகவும் பிடிவாத குணம் கொண்டவள் அல்ல. கணவன் முடியாது என்றால், சரி என்று விட்டுவிடும் குணம் படைத்தவள். அதனால்தான் சதாசிவமும் அவளது ஆவலைப்பற்றி அசட்டையாகவே இருந்தான்.

தாயும் தந்தையும் தம்பியைப் பார்க்க டில்லிக்குச் சென்றபின் ஒருமாத காலம் தனித்து மனைவியுடன் குடித்தனம் செய்யும் சந்தர்ப்பம் சதாசிவத்திற்கு நேரிட்டது. அலமேலு அம்மாளின் கண்டிப்பும் அதிகாரமுமின்றிச் சுயேச்சையாக இருந்த அந்த இளந் தம்பதிகள் அந்த ஒரு மாத காலத்தை விரைவில் போக்கிவிட்டனர். தாயார், தகப்பனார், அண்ணன், தங்கை என்ற ஒருவரும் இன்றி, தனியே மிகவும் சுயேச்சையுடன் காலங்கழித்த அந்த நாட்களில் ஜயாவினுடைய எல்லாக் கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வதில் அவனுக்கு அபரிமிதமான ஓர் ஆனந்தம் ஏற்பட்டது.

அன்று காலைப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்த அவனது கண்களில் அந்த நடன விளம்பரம் தென்பட்டது. அவனாகவே பேச்சை ஆரம்பித்தான். இரண்டு தடவை தன் கோரிக்கையில் ஏமாற்றமடைந்திருந்த ஜயா தனாக இனி அதைப்பற்றி ஒன்றும் கேட்க மாட்டாள் என்று அவன் அறிவான்.

''இன்று முதல் காட்சிக்கு நாம் போகலாம். என்ன, உனக்குச் சம்மதந்தானே?'' என்று கேட்ட சதாசிவம் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

''ஆரம்ப விழாவைத் திறந்து வைப்பவர்கள் போல் முதல் காட்சிக்கே போக வேண்டுமா? பார்க்கலாம்.

நாளைக்கு முடிந்தால் போய்விட்டு வரலாமே!'' என்று ஜயா, தனது ஆவலை அடக்கிக்கொண்டு சொன்னாள்.

''நாளைக்கு என்னால் முடியாது. ஆபீஸ் வேலை தலைக்கு மேல் கிடக்கிறது. அதற்கடுத்த நாள் அம்மா ஊரிலிருந்து வந்துவிடுவாள். பிறகு, போகவே முடியாது. இன்றைக்கு முதல் காட்சிக்கே போகவேண்டியதுதான். முதல் வகுப்பு டிக்கெட் இரண்டை முன்னாடியே வாங்கி வரும்படி ஏற்பாடு பண்ணிவிடுகிறேன். நான் ஆபீஸிலிருந்து அரை நாள் லீவு எடுத்துக்கொண்டு பகல் சாப்பாட்டிற்கு ஒரு மணிக்கு வந்து விடுகிறேன்'' என்று கூறினான். ஜயாவிற்கு அவனுடைய ஏற்பாடு மிக்க சந்தோஷத்தைக் கொடுத்தது.

சதாசிவம் ஆபீஸிற்குச் சென்ற சிறிது நேரம் கழித்து ஆபீஸிலிருந்து ஒரு பையன் வந்தான். ''ஐயா இவைகளை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்'' என்று கூறிக்கொண்டு ஜயாவிடம் இரண்டு முதல் வகுப்பு டிக்கெட்டுகளைக் கொடுத்துச் சென்றான். கணவன் ஆபீஸ் வேலையில் நடனக் காட்சியைப் பற்றி மறக்காமல் டிக்கெட் வாங்கியிருப்பதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து போன ஜயா அன்று மாலை அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டு வாசல் ஹாலில் ஒரு கதைப் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தாள். புத்தகத்தின்மீது அவள் மனம் லயிக்கவில்லை.

ஹாலில் மாட்டியிருந்த கடிகாரம் 'டாண் டாண்' என்று ஒலிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். பகல் மணி இரண்டு! ஒரு மணிக்கு வருவதாகக் கூறிய சதாசிவம் மணி இரண்டாகியும் வரக்காணவில்லை. வேலை அதிகமாதலால் வர முடியவில்லையோ என்னவோ எனக் கவலையுடன் இரண்டு தடவை வாசல்புறம் வந்து எட்டிப் பார்த்தாள்.



மணி இரண்டரையானதும் ஜயாவின் பரபரப்பு அதிகரித்தது. மணி மூன்றும் ஆகிவிட்டது. சதாசிவத்தைக் காணவில்லை. 'ஒரு சமயம் நடனக் காட்சியைப் பற்றியே மறந்துவிட்டிருப்பாரோ!' என்று தனக்குள் பலவிதமாகவும் சிந்தித்துக்கொண்டு சஞ்சலத்துடன் சமையலறைப் பக்கம் வந்தாள் அவள்.

''அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தால் நீங்கள் எப்பொழுது சாப்பிடுகிறது அம்மா?'' என்று சமையற்காரம்மா கேட்டதுந்தான் அவளுக்குத் தான் சாப்பிடவில்லை என்று நினைவுக்கு வந்தது. காத்து அலுத்துப் போயிருந்த அவளுக்குப் பசியே இல்லை. ''எனக்குச் சாப்பாடு வேண்டாம். நீங்கள் சாப்பிட்டுவிட்டுக் காரியங்களைக் கவனியுங்கள்'' எனக் கூறிய ஜயா மறுபடியும் ஹாலில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

மணி நான்காயிற்று. சதாசிவம் வரும் அறிகுறியே காணவில்லை. 'இன்னும் ஒரு மணி நேரங்கூட இல்லையே! நடனக் காட்சிக்கு எப்படிப் போவது?' என்ற கவலையுடன் ஹாலுக்கும் வாசலுக்குமாகப் போய் வந்துகொண்டிருந்தாள் ஜயா.

''அம்மா! கொஞ்சம் என் வீடு வரையில் போய் வருகிறேன், சின்னப் பையனுக்கு உடம்பு சரியில்லை. நான் போகாவிட்டால் அவன் மருந்து சாப்பிடவே மாட்டான்'' என்று சமையற்காரம்மா உத்தரவு கேட்ட வண்ணம் தயங்கிக்கொண்டு வாசல் ஹாலில் வந்து நின்றாள்.

''இப்போ வீட்டுக்குப் போனால் எப்ப திரும்பி வருவீர்களாம்!'' என்று கேட்டாள் ஜயா கலவரத்துடன்.

''ராத்திரி ஏழு மணிக்குள் வந்து விடுவேன்'' என்றாள் அவள் மென்று விழுங்கிக்கொண்டு.

''வீட்டை அப்படியே போட்டுவிட்டு நீங்கள் இப்பொழுது கிளம்பினால் நான் என்ன செய்வேன்? அவர் இன்றைக்கு ஐந்து மணிக்கு ஒரு நடனக் காட்சிக்குப்

போவதாக உத்தேசித்திருக்கிறார். வர மணி ஒன்பதாகும்.
நீங்களும் வீட்டுக்குப் போவதானால் இரவு சமையல் கதி
என்ன? மற்ற வீட்டு வேலைகளை யார் கவனிப்பது?
இதைப்பற்றி முன்னாடியே ஏன் சொல்லவில்லை?'' என்று
கொஞ்சம் கோபத்துடன் கடுத்துக்கொண்டாள் ஜயா.
அவளுக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றம் சமையற்காரம்
மாளிடம் கோபமாகத் திரும்பியது.

''நான் போகாவிட்டால் குழந்தை மருந்து சாப்பிட
மாட்டானே; என்ன செய்வேன்?'' என்று அழமாட்டாக்
குறையாகக் கேட்ட சமையற்காரம்மா அவள் முகத்தைப்
பரிதாபமாகப் பார்த்தாள்.

''நீங்கள் என்ன செய்வேளோ, எனக்குத் தெரியாது'
நான் இன்றைக்கு ஐந்து மணிக்கு வெளியே போகிறேன்;
அவ்வளவுதான்!'' என்று கோபத்துடன் கூறிய ஜயா
முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள். ''நான் வீட்டுக்
குப் போய் உடனே என் பெண் சுந்தரியை அனுப்புகிறேன்.
ராத்திரிச் சமையலை அவள் கவனித்துக் கொள்வாள்''
என்று கூறிய சமையற்காரம்மாள் ஜயாவின் உத்தரவுக்
காகக் காத்திருந்தாள்.

''சரி, சீக்கிரம் அனுப்புங்கள்'' என்று கூறிய ஜயா மாடி
யறைக்குச் சென்றாள்.

ஒரு சமயம் சதாசிவம் சரியாக ஐந்து மணிக்கு வந்தால்
உடனே புறப்படத் தயாராக இருக்க வேண்டாமா எனத்
தனக்குள்ளே சமாதானம் செய்துகொண்டே அவள்
வெளியே போகத் தன்னைத் தயார் செய்துகொள்ள ஆரம்
பித்தாள். எல்லா அலங்காரமும் ஆகிவிட்டது. வேற்றுடை
மாற்றிக்கொள்வதுதான் பாக்கி. சஞ்சலத்துடன் மேஜை
மீதிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள் ஜயா. மணி
ஐந்தேகால் ஆகியிருந்தது. ஒருசமயம் சதாசிவம் ஆபீஸி
லிருந்து திரும்பி வந்து விட்டாரோ என்னவோ என்ற



சந்தேகம் ஏற்படவே, கீழே அவசரமாக இறங்கி வந்தாள்.

சமையலறைப் பக்கம் வந்த ஜயா திக்பிரமை அடைந்து
ஒரு கணம் அப்படியே நின்றுவிட்டாள். அடுப்பைக்கூட
மூட்டாது சமையற்காரம்மாளின் பெண் சுந்தரி விசித்து
விசித்து அழுதுகொண்டு நிற்பதைக் கண்டாள்.

''என்னத்துக்கம்மா அழறே!'' என்று இரக்கமாகக்
கேட்டாள் ஜயா, தனது சஞ்சலத்தை மறந்தவளாக.

''ஒன்றுமில்லை!'' என்று கூறிய சுந்தரி கண்ணீரைத்
துடைத்துக்கொண்டு முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்
டாள். கள்ளங் கபடமற்ற அவளது முகத்தைக் கண்டு ஜயா
வின் மனம் மிகவும் பச்சாத்தாபப்பட்டது. ''எதற்காக
அழுகிறாய், அம்மா? சொல்லேன்! தம்பிக்கு உடம்பு
ஏதாவது ஜாஸ்தியாகிவிட்டதா?'' என்று வற்புறுத்திக்
கேட்டாள்.

சட்டென்று பதில் அளிக்காத சுந்தரி கொஞ்சம்
தயங்கிக்கொண்டு, ''இல்லை, அதெல்லாம் ஒன்றுமில்லை.
இன்னிக்கு நானும் அவரும் டான்ஸுக்குப் போவதாகத்
தீர்மானிச்சிருந்தோம். ஐந்தரை மணிக்கு வந்து கூட்டிக்
கொண்டு போவதாக அவர் சொல்லியிருந்தார். ஆனால்...''
என்று மேலே பேச முடியாது திணறினாள் துக்கத்துடன்
அவள்.

சுந்தரியின் கழுத்திலே புதிய நகையுடன் விளங்கிய
மஞ்சள் கயிற்றை அப்பொழுதுதான் கவனித்தாள் ஜயா.
''ஆமாம், உனக்குப் போன மாசந்தானே கல்யாணம்
ஆயிற்று? அவரும் இந்த ஊரிலேதான் இருக்கிறாரா?''
என்று கேட்டாள். அவள் இதழ்க் கடையிலே ஒரு
சங்கோசப் புன்னகை லேசாக எழுந்து மறைந்தது.

''ஆமாம்! அவரும் இந்த ஊரில்தான் வேலை பார்த்
துக்கொண்டிருக்கிறார். நேத்திக்கு எங்கள் வீட்டுக்கு

வந்தபொழுது நடனக் காட்சிக்கு என்னை இன்னிக்கு ஐந் தரை மணிக்கு வந்து அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லியிருந்தார். ஆனால், அம்மா இங்கே என்னை வேலைக்கு அனுப்பிவிட்டாள்'' என்று கூறி முடித்து சுந்தரியின் கண்களில் நீர் பொங்கி வழிய ஆரம்பித்தது. உலகத்தில் தனக்குள்ள சகலத்தையும் இழந்துவிட்டவள் போல் தோன்றியது அவளது துக்கம்.

ஐந்தரை மணி அடிக்கச் சில நிமிஷங்கள்தாம் இருந் தன. சின்னஞ்சிறு பெண் சுந்தரியின் கண்ணீர் ஐயாவின் மனசை மிகவும் வேதனை செய்தது. ''சுந்தரி, அழாதே! கண்ணைத் துடைத்துக்கொள். நீ இன்று வேலை செய்ய வேண்டாம். சீக்கிரம் வீட்டிற்குப் போ!'' என்று உத்தரவு கொடுத்தாள்.

கண்களைத் துடைத்துக்கொண்ட சுந்தரி சங்கோசத் துடன் அவளைப் பார்த்தாள். ''இனிமேல் போய்க்கூடப் பிரயோஜனம் இல்லை. மணியாகிவிட்டது. டிக்கெட் கிடைக்காது'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''டிக்கெட்டைப்பற்றிக் கவலைப்படாதே. இரு, ஒரு நிமிஷத்தில் வருகிறேன்'' என்று கூறிய ஐயா மாடி யறைக்கு ஓடினாள். பத்திரமாக மேஜைக்குள் வைத்திருந்த முதல் வகுப்பு டிக்கெட்டுகள் இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து சுந்தரியின் கையில் கொடுத்தாள்.

''முதல் வகுப்பு டிக்கெட்டுகளா!'' என்று கண்களை அகல விரித்தாள் சுந்தரி. பிறகு மிக்க நன்றியறிதலுடன் விடை பெற்றுக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் பறந்து சென்று விட்டாள்.

சமையல் அறைக்குள் நுழைந்த ஐயாவின் மனசிலே குடிகொண்டிருந்த சஞ்சலம் மறைந்துவிட்டது. அதற்குப் பதில் ஒருவிதத் திருப்தியும் ஆனந்தமும் அதில் நிறைந் திருந்தன. சமையலை முடித்துவிட்டு அவள் வெளியே வருவதற்கும் அவள் கணவன் ஆபீஸிலிருந்து திரும்பி வருவதற்கும் சரியாக இருந்தது.



இரவு ஏழரையாகிவிட்டதை உணர்ந்த சதாசிவம், ''ஆபீஸில் இன்று வேலை முதுகு ஒடிந்துவிட்டது. இருந் தாலும் பரவாயில்லை. உனக்குக் குறை என்னத்திற்கு? நடனம் பார்க்கப் புறப்படுகிறாயா? வாசலிலே கார் தயாராக இருக்கிறது'' என்றான்.

''நம் சமையற்காரம்மா பெண் சுந்தரி நடனம் பார்க்க வேணுமென்று ஆசைப்பட்டாள். அவளுக்கு அந்த டிக் கெட்டுகளைக் கொடுத்துவிட்டேன். ஆமாம், நீங்கள் ரொம்பக் களைப்பாக இருக்கிறீர்களே, காபி கொண்டு வரட்டுமா?'' என்று புன்னகையுடன் கேட்ட ஐயா திருப்தி யுடன் உள்ளே திரும்பிச் சென்றாள்.

நடனக் காட்சியை ரஸிக்காது தூங்கும் கணவனுடன் அதைப் பார்ப்பதைவிட இரண்டு இளந் தம்பதிகளின் சந்தோஷத்திற்காக உபயோகப்பட்ட முதல் வகுப்பு டிக் கெட்டுகளைப்பற்றி மறந்தவளாகத் தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தாள் ஐயா.

## பாஞ்சாலியின் சபதம்

அந்திச் சூரியன் மறையும் நேரம். பக்கத்திலிருந்த மாந்தோப்பிலிருந்து குளுமையான காற்று வீசிக்கொண் டிருந்தது. முதல் நாள் பெய்த மழையில் கலங்கிக் கரை புரண்டுகொண்டிருந்தது சின்ன வாய்க்கால் நீர். கும்பலாகத் தண்ணீரின்மீது மிதந்து வந்த இலைச் சருகுகளைக் குடத் தால் ஒதுக்கிவிட்டுக் குபக்கென நீரை முகந்தாள் சொக்கி. குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக்கொண்ட அவள் திரும்பிப் பார்த்தாள். பித்தளைக் குடத்தைப் பொன் குடமாக்கிவிட எண்ணங்கொண்டவள் போல் அழுத்தி அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்த தோழி பாஞ்சாலி யைப் பரிகாசமாகப் பார்த்துக்கொண்டே சொக்கி கரைமீது